செ.வெ.எண் : 27/மே நாள் : 13.05.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ல் வாக்குப்பதிவிற்கான முன்னேற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த செய்தியாளர்கள் சந்திப்பு

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (13.05.2016) மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் தலைமையில் சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016 வாக்குப்பதிவிற்கான முன்னேற்பாடு பணிகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.

செய்தியாளர் சந்திப்பில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-க்கான வாக்குப்பதிவு மே 16-ஆம் தேதி அன்று நடைபெறுவதை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்தல் வாக்குப்பதிவிற்கான அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளில் வாக்குப்பதிவிற்காக மொத்தம் 747 அமைவிடங்களில் 1,307 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவற்றில் முதற்கட்டமாக 34 இடங்களில் உள்ள 73 வாக்குச்சாவடி மையங்கள் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களாக கண்டறியப்பட்டிருந்தன. மேலும் தற்போது காவல்துறையுடன் ஒருங்கிணைந்து ஆய்வு செய்து 88 இடங்களில் உள்ள 212 வாக்குச்சாவடி மையங்கள் பதற்றமான வாக்குச்சாவடி மையங்கள் என கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வாக்குச்சாவடி மையங்களில் மத்திய அரசு துணை இராணுவப் படை வீரர்கள் கண்காணிப்புப்பணியில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்திய தேர்தல் ஆணையம், பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில், வாக்குப்பதிவில் வெளிப்படைத் தன்மையினை ஏற்படுத்திடும் வகையிலும், பாதுகாப்பினை உறுதி செய்திடும் வகையிலும், வாக்குப்பதிவினை நேரடியாக வலைதளத்தில் ஒளிபரப்பு செய்தல் (Online Webcasting) வெப்கேமரா மூலம் பதிவு செய்தல் (Offline Webcasting), நுண் பார்வையாளர்கள் நியமித்தல், மத்திய அரசு துணை இராணுவப் படை வீரர்கள் நியமித்தல் உள்ளிட்ட ஏதாவதொரு வகையில் கண்காணிப்பு பணியினை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளது. அதனடிப்படையில் இராமநாதபுரம் மாவட்டத்தில் 395 வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவினை நேரடியாக வலைதளத்தில் ஒளிபரப்பு செய்திடவும், 70 வாக்குச்சாவடி மையங்களில் வெப்கேமரா மூலம் பதிவு செய்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் 5,50,615 ஆண் வாக்காளர்களும், 5,49,506 பெண் வாக்காளர்களும், 73 இதர வாக்காளர்களும், 1,224 பணித்தொகுதி வாக்காளர்களும் ஆக மொத்தம் 11,01,418 வாக்காளர்கள் உள்ளனர். பணித்தொகுதி வாக்காளர்கள் நீங்கலாக, மீதமுள்ள 11,00,194 வாக்காளர்களில் 9,94,845 வாக்காளர்களுக்கு (90.42%) வாக்குச்சாவடி சீட்டு வழங்கப்பட்டுள்ளது. மேலும் தேர்தல் பணியில் ஈடுபடும் 10,013 அலுவலர்கள் தவறாமல் வாக்குப்பதிவு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதுவரை 6,421 அலுவலர்களுக்கு தபால் வாக்குச் சீட்டுகளும், 1,059 அலுவலர்களுக்கு தேர்தல் பணி சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் பணியில் ஈடுபடும் வேறு மாவட்டத்தைச் சேர்ந்த 1,442 அலுவலர்களுக்கு தபால் வாக்குப்பதிவு செய்திட படிவங்கள் வழங்கப்பட்டுள்ளன.

வாக்குப்பதிவிற்காக 1307 வாக்குச்சாவடி மையங்களில், வேட்பாளர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் 2241 வாக்குச்செலுத்தும் கருவிகளும் (Ballot Unit), 1503 கட்டுப்பாட்டு கருவிகளும் (Control Unit) தேவை என கணக்கிடப்பட்டு, 2410 வாக்குச் செலுத்தும் இயந்திரங்களும் , 2228 கட்டுப்பாட்டு கருவிகளும் பாதுகாப்பான முறையில் தயார் நிலையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தேர்தல் வாக்குப்பதிவு நாள் நெருங்குவதை முன்னிட்டு தேர்தல் முறைகேடுகள் நடைபெறாமல் தடுப்பதற்காக முன்னதாக செயல்பட்டு வந்த பறக்கும் படை குழுவினர்களுடன் கூடுதல் பறக்கும் படை குழுவினர்களை ஈடுபடுத்திட தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது. அதனடிப்படையில், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளில் முன்னதாக இயங்கி வந்த 27 பறக்கும் படை குழுவினர்களுடன் சேர்த்து தற்போது கூடுதலாக 42 பறக்கும் படை குழுவினர்கள் கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இதுதவிர, மாவட்டத்தில் தேர்தல் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள மொத்தம் 119 மண்டல குழுவினர்களும் தேர்தல் பறக்கும் படை குழுவினர்களாக செயல்படுகின்றனர். இதன் மூலம் மாவட்டத்தில் மொத்தம் 188 தேர்தல் பறக்கும் படை குழுவினர்கள் தேர்தல் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வாக்குச்சாவடி மையங்களில் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, மின்சார வசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளும் ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் சிரமமின்றி வாக்குப்பதிவு செய்திட சக்கர நாற்காலிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. எனவே, சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016 வாக்குப்பதிவிற்கான அனைத்து முன்னேற்பாடு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.என்.மணிவண்ணன்,இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அலிஅக்பர் உட்பட அரசு அலுவலர்கள்,செய்தியாளர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**